Puducherry / Regional Bulletin / Tamil /18.10hrs / 20.05.2026 / Script

**வணக்கம்**

**ஆகாஷ்வாணி-புதுச்சேரி**

**மாநிலச் செய்திகள்**

**வாசிப்பவர் : நாராயணசாமி**

**தேதி : 20.05.2026 – புதன்கிழமை நேரம் : மாலை 6.10 மணி**

---

***தலைப்புச் செய்திகள்***

பிரதமர் திரு. நரேந்திர மோடி இன்று, இத்தாலியின் ரோம் நகரில் அந்நாட்டுப் பிரதமர் திருமதி. ஜார்ஜியா மெலோனியுடன் பிரதிநிதிகள் நிலையில் பேச்சுவார்த்தை நடத்தினார்.

பாதுகாப்பு அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங், இன்று, தென்கொரிய தலைநகர் சியோலில், அந்நாட்டு பாதுகாப்பு அமைச்சரை சந்தித்துப் பேசினார்.

புதுச்சேரியில் இன்று நடைபெற்ற, 16ஆவது சட்டப் பேரவையின் முதலாவது கூட்டத்தில், புதிய உறுப்பினர்கள் பதவி ஏற்றுக் கொண்டனர்.

தமிழகத்தில் இன்று வெளியாகி உள்ள 10ஆம் வகுப்பு பொதுத்தேர்வு முடிவுகளில், தேர்ச்சி விகிதம். 91.86 சதவிகிதமாக பதிவாகி உள்ளது.

*மோடி இத்தாலி -1 (10)*

பிரதமர் திரு. நரேந்திர மோடி இன்று, இத்தாலியின் ரோம் நகரில் அந்நாட்டுப் பிரதமர் திருமதி. **ஜார்ஜியா மெலோனியுடன்** பிரதிநிதிகள் நிலையில் பேச்சுவார்த்தை நடத்தினார். வர்த்தகம் , முதலீடுகள், தொழில்நுட்பம். பாதுகாப்பு, பசுமை எரிசக்தி உள்ளிட்ட துறைகளில் ஒத்துழைப்பை வலுப்படுத்திக் கொள்வது குறித்து, இந்த சந்திப்பில் முக்கிய கவனம் செலுத்தப்பட்டது. இந்தியாவிற்கும் – இத்தாலிக்கும் இடையிலான, தந்திரோபாய கூட்டாண்மை உறவுகள், பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் மக்கள் நிலையிலான தொடர்புகளின் அடிப்படையில் தொடர்ந்து வலுவடைந்து வருவதை பிரதிபலிக்கும் வகையில் இந்தப் பேச்சுவார்த்தைகள் அமைந்து இருந்தன. இது குறித்து கூடுதல் விவரங்கள்…

**(வாய்ஸ்)**

***மோடி இத்தாலி* -2 (13)**

**(வாய்ஸ்)**

திரு. நரேந்திர மோடி, திருமதி. ஜார்ஜியா மெலோனி ஆகிய இரு தலைவர்களும், இன்றைய சந்திப்பின் போது, பரஸ்பர அக்கறையுள்ள பிராந்திய மற்றும் உலகப் பிரச்சனைகள் குறித்தும் விவாதித்தனர். பொருளாதாரம் மற்றும் தூதரக உறவுகளை வலுப்படுத்திக் கொள்ளும் அதே வேளை, உலகப் பிரச்சனைகளிலும் ஒத்துழைப்பை மேம்படுத்திக் கொள்ள வேண்டியதன் அவசியத்தை இரு தலைவர்களும் மீண்டும் வலியுறுத்தினர். இந்தியாவிற்கும் ஐரோப்பிய நாடுகளுக்கும் இடையே வலுவான உறவுகளை பராமரிப்பதில், இத்தாலி அளித்துவரும் ஆதரவை, பிரதமர் திரு. நரேந்திர மோடி பாராட்டினார். பிரதமர் திரு. நரேந்திர மோடி ரோம் நகரில், இத்தாலிய அதிபர் திரு. செர்ஜியோ மாட்டரெல்லா-வையும் சந்திக்கிறார். இரு நாடுகளுக்கும் இடையிலான உறவுகளின் முக்கியத்துவத்தை வெளிப்படுத்தும் வகையில், ரோம் நகரில் பல்வேறு நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடு செய்யப் பட்டுள்ளது.

*ராஜ்நாத் சியோல் (13)*

பாதுகாப்பு அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங், இன்று, தென்கொரிய தலைநகர் சியோலில், அந்நாட்டு பாதுகாப்பு அமைச்சர் திரு. **ஆங்-யு-பேக்-**கை சந்தித்துப் பேசினார். பிராந்திய அமைதி மற்றும் ஸ்திரத்தன்மையை பராமரிக்க ஏதுவாக, பாதுகாப்பு, பாதுகாப்பு உற்பத்தி உள்ளிட்ட துறைகளில், இருதரப்பு ஒத்துழைப்பை மேலும் வலுப்படுத்திக் கொள்வதற்கான வழிவகைகள் குறித்து, இந்த சந்திப்பின்போது விவாதிக்கப் பட்டது. பாதுகாப்பு சைபர் ஒத்துழைப்பை வலுப்படுத்திக் கொள்வது குறித்து, உடன்பாடுகளும் பரிமாறிக் கொள்ளப்பட்டதாக, திரு. ராஜ்நாத் சிங், சமூக ஊடகப் பதிவு ஒன்றில் தெரிவித்துள்ளார். இந்தியாவிற்கும் – தென்கொரியாவிற்கும் இடையிலான சிறப்பு தந்திரோபாய கூட்டாண்மை உறவுகளை தொடர்ந்து வலுப்படுத்துவதில், தாம் ஆர்வம் கொண்டுள்ளதாக அவர் மேலும் கூறியுள்ளார்.

*ஏவுகணை (12)*

ஆளில்லா குட்டி விமானங்களில் இருந்து ஏவப்பட்டு, துல்லியமான வழிகாட்டுதல் அடிப்படையில், இலக்குகளை சரியாக தாக்கவல்ல இந்தியாவின் அதிநவீன U-LPGM V-3 ஏவுகணையை தயாரிப்பு நிலையில் ஏவிப் பரிசோதிப்பதில் வெற்றி பெற்றுள்ள DRDO விஞ்ஞானிகள், பொதுத்துறை நிறுவனங்கள் மற்றும் தனியார் துறை கூட்டாளிகளுக்கு, பாதுகாப்பு அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங் வாழ்த்துத் தெரிவித்துள்ளார். பாதுகாப்புத் துறையில் சுயசார்பை எட்டுவதில் முக்கிய மைல் கல்லாக இப்பரிசோதனை அமைந்து இருப்பதாக அவர் கூறியுள்ளார். ஹெலிகாப்டர், ட்ரோன் போன்ற வான் இலக்குகளை மட்டுமின்றி, பீரங்கி போன்ற தரை இலக்குகளை தாக்குவதிலும், மிகவும் திறம்பட்டதாக இந்த ஏவுகணை திகழும் என்று அவர் மேலும் கூறியுள்ளார்.

***முர்மு (13)***

விக்சித் பாரத் இலக்கை எட்டவும், சமுதாயத்தை வளர்ச்சியின் உச்சிக்கு இட்டுச் செல்லவும், அதிகாரிகள் பல சமயங்களில் நடப்பு நிலவரங்களுக்கு எதிராக, எதிர்நீச்சல் போட வேண்டும் என, குடியரசுத் தலைவர் திருமதி. திரவுபதி முர்மு கூறியுள்ளார். 2024ஆம் ஆண்டு பிரிவைச் சேர்ந்த ஐஏஎஸ் அதிகாரிகள் குழு ஒன்று, இன்று புதுடெல்லி குடியரசுத் தலைவர் மாளிகையில், குடியரசுத் தலைவரை சந்தித்த போது அவர் இவ்வாறு கூறினார். பலதரப்பட்ட துறைகளில் பணியாற்றவும், சிறப்புத் துறைகள் சார்ந்த நிபுணர்களை வழிநடத்தவும், இளம் அதிகாரிகளுக்கு பல வாய்ப்புகள் இருப்பதை குடியரசுத் தலைவர் சுட்டிக் காட்டினார். அதிகாரிகள் மக்கள் நலனுக்கு ஏற்ப சரியான முடிவுகளை எடுக்க வேண்டும் என்றும், முடிவுகளை எடுக்காமல் விடுவது, சரியானதாக இராது என்றும் அவர் குறிப்பிட்டார்.

***மக்கள் தொகை (10)***

வரவிருக்கும் மக்கள் தொகை கணக்கெடுப்பின் ஒரு பகுதியாக, சாதி வாரி கணக்கெடுப்பு மேற்கொள்வதான மத்திய அரசின் முடிவை ஆட்சேபிக்கும் மனு ஒன்றை உச்சநீதிமன்றம் தள்ளுபடி செய்துள்ளது. இது மத்திய அரசின் கொள்கை அதிகாரத்திற்கு உட்பட்ட பிரச்சனை என்று தலைமை நீதிபதி திரு. சூர்ய காந்த் தலைமையிலான அமர்வு, இன்று, தனது உத்தரவில் கூறியது. பின்தங்கிய பிரிவினருக்கான நலத்திட்டங்களை உருவாக்க, இத்தகைய மக்களின் எண்ணிக்கை விவரங்களை தெரிந்து கொள்ளும் தேவை அரசுக்கு இருப்பதால், இத்தகைய விவரங்களை சேகரிப்பதில் தவறேதும் இல்லை என்றும் நீதிமன்றம் கூறியுள்ளது.

***புதுச்சேரி பதவியேற்பு (8)***

புதுச்சேரியில் இன்று நடைபெற்ற, 16ஆவது சட்டப் பேரவையின் முதலாவது கூட்டத்தில், புதிய உறுப்பினர்கள் பதவி ஏற்றுக் கொண்டனர். தற்காலிக சபாநாயகர் திரு. அன்பழகன், புதிய எம்எல்ஏ-க்களுக்கு பதவியேற்பு உறுதிமொழி செய்து வைத்தார். முதலில், முதலமைச்சர் திரு. ரங்கசாமி, அவையின் உறுப்பினராக பதவியேற்றதைத் தொடர்ந்து, திரு. நமச்சிவாயம், திரு. மல்லாடி கிருஷ்ணாராவ் ஆகிய அமைச்சர்களும் பின்னர் இதர உறுப்பினர்களும் பதவி ஏற்றுக் கொண்டனர்.

***ரங்கசாமி (8)***

புதுச்சேரியில் அரசின் நலத்திட்டங்கள் தொடரும் என்று முதலமைச்சர் திரு. ரங்கசாமி கூறியுள்ளார். இன்று புதிய சட்டமன்ற உறுப்பினர்கள் பதவியேற்ற பின்னர், செய்தியாளர்களிடம் பேசிய அவர், மத்திய அரசுடன் புதுச்சேரியின் உறவுகள் நன்றாக உள்ளதாகவும், பிரதமர் கூறியபடி புதுச்சேரி பெஸ்ட் புதுச்சேரியாக மாறி வருவதாகவும் கூறினார். புதுச்சேரிக்கு மாநில அந்தஸ்து வழங்க மத்திய அரசிடம் தொடர்ந்து வலியுறுத்தப்படும் என்றும், இக்கோரிக்கை நிச்சயமாக வெற்றி பெறும் என்றும் முதலமைச்சர் திரு. ரங்கசாமி குறிப்பிட்டார்.

***பத்தாம் வகுப்பு (12)***

தமிழகத்தில் இன்று வெளியாகி உள்ள 10ஆம் வகுப்பு பொதுத்தேர்வு முடிவுகளில், தேர்ச்சி விகிதம். 91.86 சதவிகிதமாக பதிவாகி உள்ளது. மாணவர்கள் 92.15 சதவிகிதமும், மாணவிகள் 96.47 சதவிகிதமும் தேர்ச்சி பெற்றுள்ளனர். 10ஆம் வகுப்பு பொதுத் தேர்வில் பங்கேற்ற 12 ஆயிரத்து 467 பள்ளிகளில், 5 ஆயிரத்து 171 பள்ளிகள், 100 சதவிகித தேர்ச்சி விகிதம் காட்டி உள்ளன. இதில், ஆயிரத்து 931 அரசுப் பள்ளிகளும் அடங்கும் என தமிழக அரசு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. மாவட்டங்களைப் பொறுத்தவரை, புதுக்கோட்டை, சிவகங்கை, திருச்சி, தஞ்சை மற்றும்

கன்னியாகுமரி மாவட்டங்களில், 97 சதவிகிதத்திற்கும் அதிகமாக தேர்ச்சி விகிதம் பதிவாகி உள்ளது. சிறையிலிருந்தே 10ஆம் வகுப்பு பொதுத் தேர்வு எழுதிய 370 கைதிகளில், 354 பேர் தேர்ச்சி பெற்றுள்ளதும் குறிப்பிடத் தக்கது.

***அளவியல் -1 (8)***

அனைத்து எடைக் கற்கள் மற்றும் அளவீட்டு சாதனங்களின் துல்லியத் தன்மையை சரிபார்த்து சான்றளிப்பதன் மூலம், வர்த்தகச் சந்தையிலும், சமுதாயத்திலும், முழுமையான நேர்மையை நிலைநாட்டுவதே, அளவியல் சட்டங்களின் நோக்கம் என்று, மத்திய நுகர்வோர் விவகாரங்கள் துறை அமைச்சர் திரு. பிரல்ஹாத் ஜோஷி கூறியுள்ளார். உலக அளவியல் தினமான இன்று, புதுடெல்லியில் நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில், மெய்நிகர் முறையில் அவர் உரையாற்றினார். அமைச்சரின் உரை குறித்து கூடுதல் விவரங்கள்…

**(வாய்ஸ்)**

***அளவியல் - 2 (12)***

**(வாய்ஸ்)**

தொழில் – வர்த்தகத் துறையினர் இடையே **அளவீட்டுத் துல்லியத்தை**யும், நுகர்வோர் இடையே **நம்பிக்கை உணர்வை**யும் மேம்படுத்துவதில், அளவீட்டு சட்டங்களுக்கு முக்கிய பங்கு இருப்பதாக அமைச்சர் திரு. ஜோஷி கூறினார். சிந்துச் சமவெளி காலத்தில் இருந்தே இந்தியாவில் **ஒரே சீரான அளவைகள்** பயன்படுத்தப் படுவதையும், தற்போது, சர்வதேச சட்ட **அளவியல் அமைப்பில்** இடம் பெற்றுள்ள 13 நாடுகளில் ஒன்றாக இந்தியா திகழ்வதையும், அமைச்சர் தமது உரையில் சுட்டிக் காட்டினார். தேசிய அளவிலான, சட்ட **அளவியல் இணையதளம்** ஒன்றை உருவாக்க, அரசு நடவடிக்கை எடுத்து வருவதாக அவர் தெரிவித்தார். இந்தியாவில் தயாராகும் பொருட்கள், உலகத் தரத்தில்,

சுற்றுச் சூழலுக்கு ஏற்றதாக அமைய வேண்டும் என, பிரதமர் திரு. நரேந்திர மோடி வலியுறுத்தி வருவதையும், அமைச்சர் சுட்டிக் காட்டினார்.

***வானிலை (13)***

தென்கிழக்கு அரபிக்கடல் முதல் மத்திய வங்கக் கடல் வரை, வளிமண்டல காற்றழுத்த தாழ்வுப் பாதை நிலவுவதால், தமிழ்நாடு மற்றும் புதுச்சேரி – காரைக்கால் பகுதிகளில் வரும் 26ஆம் தேதி வரை மழை நீடிக்கலாம் என எதிர்பார்க்கப் படுகிறது. இன்றும் – நாளையும், தமிழகத்தில் ஓரிரு இடங்கள் மற்றும், புதுச்சேரி – காரைக்கால் பகுதிகளில், லேசானது முதல் மிதமான மழைக்கு வாய்ப்பு இருப்பதாக, வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. கோவை மாவட்ட மலைப் பகுதிகள், நீலகிரி, தேனி, ஈரோடு மற்றும் திண்டுக்கல் மாவட்டங்களின் ஓரிரு இடங்களில், பலத்த காற்றுடன் கூடிய கனமழை பெய்யக்கூடும் என்றும் தெரிவிக்கப் பட்டுள்ளது. சூறாவளி காற்றுக்கு வாய்ப்பு அதிகம் உள்ள தென் தமிழகத்தின் கடலோரப் பகுதிகள், வங்கக் கடல் பகுதிகள், அரபிக் கடல் பகுதிகளுக்கு மீனவர்கள் செல்ல வேண்டாம் என அறிவுறுத்தப் பட்டுள்ளனர்.

***ஐபிஎல் (4)***

ஐபிஎல் கிரிக்கெட்டில், இன்று இரவு 7.30 மணிக்கு கொல்கத்தாவில் நடைபெறும் போட்டியில், கொல்கத்தா - மும்பை அணிகள் மோத உள்ளன. நேற்று இரவு ஜெய்ப்பூரில் நடைபெற்ற போட்டியில், ராஜஸ்தான் அணி, 7 விக்கெட் வித்தியாசத்தில் லக்னோ அணிக்கு எதிராக வெற்றி பெற்றது.

*ரயில்வே (15)*

ஹவுரா, கோட்டா, அமரபுரா உள்ளிட்ட இடங்களில் அண்மையில் ரயில் பெட்டிகளில் ஏற்பட்ட தீ விபத்துகளில் சமூக விரோத சக்திகளின் கை இருப்பதாக, விசாரணைகளில் தெரிய வந்துள்ளது. இந்த சம்பவங்களை ரயில்வேதுறை மிகவும் தீவிரமாக எடுத்துக் கொண்டுள்ளதாகவும், ரயில்வே பாதுகாப்புப் படையினர் இது குறித்து விரிவான விசாரணை மேற்கொண்டு வருவதாகவும், புதுடெல்லியில் சம்பந்தப்பட்ட வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. ரயில் பயணிகளின் பாதுகாப்பில், ரயில்வே துறை மிகுந்த உறுதிப்பாடு கொண்டுள்ளதாகவும், ஹவுரா மற்றும் அமரப்புரா சம்பவங்களின் போது, ரயில்வே துறையின் உடனடி நடவடிக்கை மேற்கொண்டதே, பெரிய விபத்துக்கள் தவிர்க்கப் பட்டதற்குக் காரணம் என்றும் தெரிவிக்கப் பட்டுள்ளது. ரயில் பயணிகள் மிகுந்த எச்சரிக்கையுடன் இருந்து, சந்தேகத்திற்கு இடமான பொருட்கள் மற்றும் செயல்பாடுகள் குறித்து, 1-3-9 என்னும் உதவி எண்ணில் தகவல் தெரிவிக்கலாம் என்றும் ரயில்வே துறை கேட்டுக் கொண்டுள்ளது.

***மீண்டும் தலைப்புச் செய்திகள்***

பிரதமர் திரு. நரேந்திர மோடி இன்று, இத்தாலியின் ரோம் நகரில் அந்நாட்டுப் பிரதமர் திருமதி. **ஜார்ஜியா மெலோனியுடன்** பிரதிநிதிகள் நிலையில் பேச்சுவார்த்தை நடத்தினார்.

பாதுகாப்பு அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங், இன்று, தென்கொரிய தலைநகர் **சியோலில்**, அந்நாட்டு பாதுகாப்பு அமைச்சரை சந்தித்துப் பேசினார்.

புதுச்சேரியில் இன்று நடைபெற்ற, 16ஆவது சட்டப் பேரவையின் முதலாவது கூட்டத்தில், புதிய உறுப்பினர்கள் பதவி ஏற்றுக் கொண்டனர்.

தமிழகத்தில் இன்று வெளியாகி உள்ள 10ஆம் வகுப்பு பொதுத்தேர்வு முடிவுகளில், தேர்ச்சி விகிதம். 91.86 சதவிகிதமாக பதிவாகி உள்ளது.

**இத்துடன் இந்த செய்தி அறிக்கை நிறைவு பெறுகிறது. RSS / CN / RK**